## 2448. பன்னிரண்டு உயிர்வேதனை

அனலும், சீதமும், வாதமும், அசனியும்,
புனலும், ஆயுதமும், விடமும், விட மருந்தும்,
பசியும், தாகமும், பிணியும், உணவறாமையும்
உயிரின் வேதனை ஓர் ஈராறே.

**பன்னிரண்டு உயிர் வேதனை (12)**

1. அனல், 2. சீதம், 3. வாதம், 4. அசனி, 5. புனல், 6. ஆயுதம், 7. விடம், 8. விடமருந்து, 9. பசி, 10. தாகம், 11. பிணி, 12. உணவறாமை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1:3-4 வாதமும் பனியும், 4. சனியும், சளியும்
3:1-2 பசியுநீர் வேட்கையும் 3-4 பிணியுமுன் வறுமையும்.
இதனை அடுத்து,
அகர முதல வச்செழுத் தினையே
சோடச கலையெனச் சொல்லினர் புலவர்
என்றும்,
அகர முதலௌ கார மீறாய்ப்
பகருஞ் சோடச கலையென லாகும்
என்றும் பாடவேறுபாடுகளுடன் ஒரு நூற்பா சில பிரதிகளில்
உள்ளது. இதன் பொருளடக்கம் விளங்கவில்லை. (164)

## 2449. பதினெண் பாடை.

அங்கம், வங்கம், கலிங்கம், கவுசலம்,
சிந்து, சோனகம், திராவிடம், சிங்களம்,
மகதம், கவுடம், மராட்டம், கொங்கணம்,
துளுவம், சாவகம், சீனம், காம்போதி,
அருமணம், பப்பரம் என்னச் சொன்னவை
பதினெண் பாடை ஆம்எனப் பகர்வர்.

**பதினெண் பாடை (18)**

1. அங்கம், 2. வங்கம், 3. கலிங்கம், 4. கவுசலம், 5. சிந்து, 6. சோனகம், 7. திராவிடம், 8. சிங்களம்,



9. மகதம், 10. கவுடம், 11. மராட்டம், 12. கொங்கணம், 13. துளுவம், 14. சாவகம், 15. சீனம், 16. காம்போதி, 17. அருமணம், 18. பப்பரம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1:4 கவுசிகம், கௌசிகம், கோசிகம்
2:3 திரவிடஞ்
3:2 கவுண்டம், கொல்லம், கன்னடம்
3 மாராட்டம், மராடம்
4:2 சாவதஞ், சாளுவஞ்
3 சீனி, 4. காம்போசம்
4 துளுவஞ் சீன காம் போதி கவுடம்
5:1 பருணம், வருணம், கவுடம். (165)

## 2450. தேவர் பதினெண்கணம்

அமரர், சித்தர், அசுரர், சாரணர்,
கருடர், கின்னரர், கிம்புருடர், காந்தருவர்,
இயக்கர், விஞ்சையர், இராக்கதர், பூதர்,
பசாசு, தாரகை, முனிவர், உரகர்,
நாகர், போக பூமியர் என்னப்
பாகுபட்டது பதினெண் கணமே.

**தேவர் பதினெண் கணம் (18)**

1. அமரர், 2. சித்தர், 3. அசுரர், 4. சாரணர், 5. கருடர், 6. கின்னரர், 7. கிம்புருடர், 8. காந்தருவர், 9. இயக்கர், 10. விஞ்சையர், 11. இராக்கதர், 12. பூதர், 13. பசாசு, 14. தாரகை, 15. முனிவர், 16. உரகர், 17. நாகர், 18. போகபூமியர்,

**பாடவேறுபாடு—விளக்கம்**

1:4 தயித்தியர்
2:4 கந்தருவர்
3:4 பூதம்